**இலங்கை முதலீட்டு சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம**

இலங்கை முதலீட்டுச் சபையின் (“சபை”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடய அழுத்த பந்தி**

எனது அபிப்பராயத்தை முனைப்பழியாக்காமல், நிதிக்குற்றுக்களின் குறிப்பு 2.5 மற்றும் குறிப்பு 3.15 க்கு நான் கவனத்தை ஈர்க்கிறேன்.

(அ) 1978 இன் 04 ஆம் இலக்க இன் முதலீட்டுச் சபைச் சட்டமானது 2024 ஆகஸ்ட் 09அன்று சபாநாயகரால் சான்றுப்படுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பொருளாதார மாற்றச் சட்டத்தின் பிரிவு 193 இன் பிரிவு (1) மூலம் ரத்து செய்யப்பட வேண்டும். என்பதை குறிக்கும் குறிப்பு 2.5 க்கு உங்கள் கவனத்தை ஈர்க்கிறேன்.எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பொருளாதார மாற்றச் சட்டத்தின் பிரிவு 1 இன் பிரிவு (2) இன் அடிப்படையில், பகுதி II , பகுதி III மற்றும் பிரிவு 193 இன் ஏற்பாடுகள் கௌரவ சபாநாயகர் இந்த சட்டம் தொடர்பாக சான்றழித்த திகதியில் இருந்து செயல்பாட்டிற்கு வரும் மற்றும் பிரிவு 1 இன் பிரிவு (3) இன் பிரகாரம், பகுதி II , பகுதி III மற்றும் பிரிவு 193 இன் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆணையின் மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய திகதிதிக்குப் பின்னர்தான் (”நியமிக்கப்பட்ட திகதி”) செயல்பாட்டிற்கு வரும். இது பிரிவு 1 இன் துணைப்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள சபாநாயகரின் சான்றிதழின் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இது ஒரு திகதியாக இருத்தல் வேண்டும்.
நிதிக் கூற்றுக்களை இலங்கை முதலீட்டுச் சபையின் ஆற்றலை பற்றி முகாமை மதிப்பீடு செய்துள்ளது. இதன் பிரகாரம், 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இலங்கைச் முதலீட்டுச் சபை சட்டத்தின் நோக்கம் நீக்கப்பட்டாலும், சபையின் செயல்பாடுகள் இலங்கை பொருளாதார ஆணைக்குழுவால் (ECSL) உள்வாங்கப்படும். எனவே, இலங்கையின் முதலீட்டுச் சபையானது, எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து தகவல்களையும் கருத்தில் கொண்டு, கலைப்பு அல்லது செயல்பாடுகளை நிறுத்துவதற்கான தேவையை எதிர்பார்க்கவில்லை.எனவே, 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் சபை தொடர்ந்தியங்கும் அக்கறையின் அடிப்படையினை ஏற்றுக்கொண்டது

எவ்வாறாயினும், இலங்கை முதலீட்டுச் சபை தொடர்பான இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் இந்த அறிக்கையின் தகதி வரையிலம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஆ) நான் குறிப்பு 3.15 க்கு கவனத்தை ஈர்க்கிறேன் மற்றும் குறிப்பில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 32 இன் கீழ் முதலீட்டு சபையானது நிறுவன வருமான வரியிலிருந்து தற்போது விலக்களிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2018 ஏப்ரல் 01 முதல் நடைமுறைக்கு வரும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் பொதுவான விலக்களிப்புக்கள்

நீக்கம் செய்யப்பட்டன. புதிய சட்டத்தின் கீழ் தற்போத முதலீட்டுச் சபை வரி செலுத்துவதற்கு பொறுப்பாக உள்ளதா என்பதை தெளிவுபடுத்துவதற்காக சபையானது 2017 ஆம் ஆண்டில் சட்டமா அதிபரிடம் அபிப்பிராயமொன்றினை கேட்டுள்ளது. இந்த விடயத்தின் தீர்ப்பானது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு BOI இனால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்தான நிலுவைத் தொகை ரூபா.1,480,032,535 ஆக இருந்தது மற்றும் இது முந்தைய ஆண்டல் உள்ள தொடர்புடைய தொகையை விட 69 சதவீதம் அதிகமாகும். | நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைகளில் பெரும்பகுதி மூடப்பட்ட மற்றும் ரத்து செய்யப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து வந்ததவையாகும். திறைசேரியின் அங்கீகாரத்துடன் அறவீடசெய்யபடாத தொகைகளினை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருடாந்த மொத்த நிலுவைக் கட்டணத் தொகையில் 87 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வருடாந்திரக் கட்டணத்திற்காக மீளாய்வாண்டில் ரூா.276,287,243 சேதஇழப்பிற்கான ஒதுக்கீடொன்று பதிவு செய்யப்பட்டது. | குறித்துக்கொள்ளப்பட்டது | -மேற்படி- |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய பெறவேண்டிய ரூபா. 40,574,617 தொகையானது 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் காணப்பட்டது. | திறைசேரியின் அங்கீகாரத்துடன் தொகைகளினை அறவீடு செய்வதற்கும் மற்றும் அறவீடசெய்யபடாத தொகைகளினை பதிவழிப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.5.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 8 ஒப்பந்தங்கள் நிறைவடைந்திருந்த போதிலும் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான மொத்த பிடித்து வைத்தல் பணம் ரூபா.2,375,127 நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டது. | பிடித்து வைத்தல் பணங்களை விடுவிப்பதுடன் தொடர்புடைய ஒப்பந்தங்களைக் கண்டறிந்த பின்னர் இந்தத் தொகைகளை சபையின் வருமானமாகக் கருதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கணக்குகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும் மற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் அல்லது வருமானமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நாணாவித கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா.3,293,593 மொத்த தொகையானது மூன்று | சபையானது நாணாவித கடன்கொடுத்தோர்களை விரிவாக | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டது. | மீளாய்வு செய்வதுடன் கணக்கு புத்தகங்களில் இருந்து நாணாவித கடன்கொடுத்தோர்களை பதிவழிப்பு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை எதிர்பார்க்கும். 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இது சீராக்கல் செய்யப்படும். | |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக் கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 04 ஆம் இலக்க முதலீட்டு சபைச் சட்டத்தின் 3(இ) ஆம் பிரிவு | வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதும் மேம்படுத்தல் செய்வதும் சபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்த போதிலும் 2018 முதல் 2023 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் கண்டி கைத்தொழில் பூங்காவிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 7.004 மில்லியன் முதலீட்டை ஒரு முதலீட்டாளர் மட்டுமே வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. | இந்த காலகட்டத்தில், COVID-19 தொற்றுநோய் உலகம் முழுவதும் பரவியது மற்றும் இலங்கை அதன் மோசமான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. எவ்வாறாயினும், தற்போதுள்ள முதலீட்டாளர்களை மீண்டும் முதலீடு செய்ய ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்குள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | கண்டி கைத்தொழில் பூங்காவில் உள்ள எட்டு நிறுவனங்களும், பியகம ஏற்றுமதி பதப்படுத்தும் வலயத்தில் உள்ள மூன்று நிறுவனங்களும், தொடர்புடைய சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை புதுப்பித்திருக்கவில்லை. | தொழிற்சங்கம் அதன் முறையான செயல்பாடுகளை உறுதி செய்வதற்காக தொழில்துறையையும் அதன் சுற்றுச்சூழல் அம்சங்களையும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது மற்றும் குறைபாடுகளை சரி செய்த பின்னர், சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் உரிமங்கள் உரிய திகதியில் புதுப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2013 நவம்பர் 12 ஆம் திகதியிடப்பட்ட 13/1599/561/022 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம். | 2023 செப்டம்பர் 18 இல் உள்ளவாறு கண்டி கைத்தொழில் பூங்காவின் விரிவாக்கத்திற்காக 5.646 ஹெக்டேர் காணியின் (KTI காணி) உரிமையானது சபைக்கு மாற்றப்படவில்லை. இதன் விளைவாக, இந்த காணியானது 2013 ஆம் ஆண்டு முதல் எந்த முதலீட்டு நடவடிக்கைகளும் இடம்பெறாத் வெற்றுகாணியாக உள்ளது. | காணியின் பயன்பாடு 2023 மார்ச் 10 அன்று குண்டசாலை பிரதேச சபை அலுவலகத்தினால் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், 22 பெப்ரவரி 2024 திகதியிடப்பட்ட பிரதேச செயலாளரின் கடிதத்தின் மூலம் இந்த காணியினை அணுகுவதற்கான பாதையினை அபிவிருத்தி செய்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், காணியினை காணி ஆணையாளர் மூலம் சபைக்கு சட்டப்பூர்வமாக ஒப்படைத்தல் இன்னும் நிலுவையில் உள்ளது. | அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் தொடர்ந்து வந்த திருத்தங்கள் | | | |
| i. | 3.1 ஆம் பிரிவு | அனுமதிக்கப்பட்ட வரையறையினை விஞ்சியதாக ஆறு நிர்வாக இயக்குநர்களுக்கு 1,440 லீற்றர் எரிபொருள் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன, இதன் விளைவான மொத்தம் பெறுமதி ரூபா.511,800 ஆகும். | தொடர்புடைய பயணத்திற்கான மேலதிகமான எரிபொருள் மீளளிப்புக்காக , பணிப்பாளர் நாயகம் / நிறைவேற்று பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) / நிறைவேற்று பணிப்பாளர் (வலயங்கள்) / பிரிவுத் தலைவர் ஆகியோரின் அங்கீகாரம் / ஒப்புதலைப் பெறுமாறு சிரேஷ்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ii. | 3.2 ஆம் பிரிவு | இந்த விதிமுறைக்கு முரணாக, மேலதிக எரிபொருளுக்கான | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவுகளாக ரூபா.1,269,800 முறையான அங்கீகாரமின்றி வழங்கப்பட்டுள்ளன. | | |
| (உ) 2021 நவம்பர் 16 ஆம் திகதியிடப்பட்ட 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | - |
| i. கூட்டமைப்பு ஆளுகைக்கான வழிகாட்டுதல்கள் | | | |
| • 2.6 ஆம் பிரிவு | பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் அல்லது நிறுவனத்தில் ஏற்கனவே வேறு பணியில் ஈடுபட்டுள்ள வேறு பணியாளர்கள் பணிப்பாளர்கள்சபையின் செயலாளராக நியமிக்கப்படக் கூடாது என்ற போதிலும், மனிதவள மற்றும் நிர்வாகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். | நிறைவேற்று பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) 2017 மற்றும் சுற்றறிக்கைக்கு முன்னதாக பதில் இயக்குநராக (HR) செயல்பட்டார். எவ்வாறாயினும், 2022 மே 04 அன்று நடைபெற்ற பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில் நிறைவேற்று பணிப்பாளரை (மனித வளம் மற்றும் நிர்வாகம்) சபையின் செயலாளராகத் தொடருவதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. | சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| • 3.2 ஆம் பிரிவு | 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த செயல்திறன் மதிப்பீட்டு கூட்டங்கள் (APRM) இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையிலும் நடத்தப்படவில்லை, இந்த கூட்டங்கள் பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கையினை சமர்ப்பதற்கு முன்னர் மற்றும் ஐந்தொகை திகதியை தொடர்ந்து வரும் ஐந்து மாதங்களுக்குள் நடாத்தப்படல் வேண்டும். | செயல்திறனை மதிப்பீடு செய்ய தனிக் கூட்டங்கள் எதுவும் இல்லை என்ற போதிலும் ஒவ்வொரு ஆண்டுடன் தொடர்பான செயல்திறனானது பொருத்தமானதாக அடுத்த ஆண்டின் சபைக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயற்பாட்டு கையேடு | | | |
| | • 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவு | அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் (SOEs) அவர்களின் தனிப்பட்ட மற்றும் ஊதியத்திற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தினை பெற வேண்டுமென்றபோதிலும் பொதுத் திறைசேரியிடமிருந்து தேவையான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமல் சபை ரூபா.462,463,188 படிகளினை வழங்கியுள்ளது. | 2023 ஒக்தோபர் 11 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டது. மேலும், இது தொடர்பான நினைவூட்டல் கூட 2024 யூலை 19 அன்று முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| | •6.6 ஆம் பிரிவு | 2023 ஆம் ஆண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் 104 நாட்கள் கால தாமதத்துடன் 2024 யூன் 13 அன்று கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>. | IMAS கணக்கீட்டு முறைமை தற்காலிகமாக செயல்பாட்டில் இல்லாத காரணத்தினால், 2023 ஆம் ஆண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை. வன்பொருள் சிக்கல்களைச் சரிசெய்த பின்னர், சபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன. | -மேற்படி- |
| (ஊ) | 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதியிடப்பட்ட PED 04/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அனைத்து வகையான அனுசரணைகள், நன்கொடைகள், CSR செலவுகள் மற்றும் வணிகம் அல்லாத விளம்பரச் செலவுகள் இடை நிறுத்தப்பட்ட போதிலும், கண்டி எசல பெரஹெராவிற்காக சபையானது ஸ்ரீ தலதா மாளிகையில் உள்ள ஊடகங்கள் மற்றும் சிறப்புத் | ஸ்ரீ தலதா மாளிகைக்கு ரூபா. 3,000,000 நன்கொடையாக வழங்குவதற்கு சபை அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடனும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரின் கோரிக்கையின் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2.7 பத்தி | திட்டங்களுக்கான பணியகத்திற்கு ரூபா.3,000,000 தொகையினை வழங்கியது. இவ்வாறான அத்தியாவசிய செலவுகள் தொடர்புடைய அமைச்சரின் அங்கீகாரத்துடனும் மாண்புமிகு நிதி அமைச்சரின் அங்கீகாரத்துடனும் மட்டுமே அங்கீகரிக்கப்படும். | அடிப்படையிலும் ஸ்ரீ தலதா மாளிகைக்கு நன்கொடை வழங்கப்பட்டது. | |
| (எ) | 2023 திசெம்பர் 15 ஆம் திகதியிடப்பட்ட PED/P/BOI/3/6/(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | 2023 ஆம் ஆண்டுக்கான சபையின் ஒவ்வொரு ஊழியருக்கும் வருடாந்த போனஸாக ரூபா.50,000 செலுத்துவதற்கு திறைசேரி அனுமதி வழங்கியிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் ரூபா.1,000,000,000 திரண்ட நிதிக்கு அனுப்பியதன் பேரில், திரண்ட நிதிக்கு தேவையான கட்டணத்தினை செலுத்தாமல் வருடாந்த போனஸாக ரூபா. 52,633,287 தொகையினை சபை வழங்கியுள்ளது. | திரண்ட நிதிக்கு பங்களிப்பாக ரூபா.1,000 மில்லியனை வழங்குவதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | போனஸ் அல்லது இலாப அடிப்படையிலான ஊக்கத் தொகைகள் பொருந்தக்கூடிய வகையில் தீர்வைகள் / பங்குலாபங்களை பகிர்ந்தளித்ததன் பின்னர் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOE) ஊழியர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். |
| (ஏ) | 2006 ஆம் ஆண்டின் தேசிய பெறுகை வழிகாட்டியின் 4.2.1 ஆம் பிரிவு | இந்த பிரிவின் பிரகாரம் முதன்மை பெறுகைத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்ச்சியாக நாளதுவரையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யப்பட்ட முதன்மை பெறுகைத் திட்டத்தினை ஆண்டுக்கு இருமுறை சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா. 5,666,592,974 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா. 2,921,657,387 ஆகும். ஆகவே நிதி விளைவுகளில் ரூபா. 2,744,935,587 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே ரூபா. 2,198,196,745 மற்றும் ரூபா. 1,291,540,351 ஆல் முறையே அதிகரித்தமை இதற்கு காரணங்களாகவிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கண்டி கைத்தொழில் பூங்காவின் அலுவலகக் கட்டிடத்தை அண்டிய சேவைப் பகுதியில் இருந்து 8'x8' இடத்தை ஒப்பந்தம் செய்யாமல் இலங்கை வங்கியின் ஜெனரேட்டர் அறைக்காக சபை ஒதுக்கீடு செய்துள்ளது, எனவே அந்த இடத்திற்கான வாடகை தீர்மானம் செய்யப்பட்டு வசூலிக்கப் பட்டிருக்கவில்லை. | இந்த பகுதியை குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து இடங்களும் குத்தகை உடன்படிக்கையின் மூலம் முறைப்படுத்தப்படல் வேண்டும், மேலும் வாடகைக் கட்டணங்கள் விதிக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 சனவரி 01 மற்றும் 2023 ஆகஸ்ட 31 க்கு இடையில் பிரிவு 16 இன் கீழ் பதிவு செய்வதற்கு 23 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்த போதிலும், 7 விண்ணப்பங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டன, மேலும் ஒரு முதலீட்டாளரால் மட்டுமே வணிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. | BOI சட்டத்தின் 16 வது பிரிவின் கீழ் பதிவு செய்ய 23 விண்ணப்பங்களை சபை பெற்றுள்ளது. தேவையான விபரங்களை பூரணப்படுத்தாமல் சமர்ப்பித்தமை, வரிசை முகவர்களினால் நிராகரிக்கப்பட்டமை , தொடர்புபட்ட லைன் வரிசை முகவர்களினால் பரிந்துரைக்கப்படாமை முதலிய பல்வேறு காரணங்களால பத்து (10) விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மேலும், BOI சட்டத்தின் 16 வது பிரிவின் கீழ் பன்னிரண்டு (12) விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டன, அதேசமயம் கோரப்பட்ட விபரங்களை செயற்திட்ட ஆதரவாளரொருவர் சபைக்கு சமர்ப்பிக்காததால் ஒரு (01) விண்ணப்பத்திற்கான அங்கீகாரம் நிலுவையில் உள்ளது. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஒருங்கிணைத்து விண்ணப்பத்திற்கான அங்கீகாரத்திற்கான செயல்முறையினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையின் கொள்கையின் பிரகாரம், 2020 முதல் 2022 வரையிலான காலக்கட்டத்தில் திட்ட முன்மொழிவுகளுக்கான அங்கீகாரம் 60 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 1978 இன் 4 ஆம் | சபை 60 நாட்களுக்குள் அங்கீகாரம் வழங்குவதற்கு உத்தேசித்திருந்த போதிலும், சில செயற்திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு எடுக்கப்பட்ட காலம் 2020 முதல் 2022 | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இலக்க BOI சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் பதிவு செய்ய சமர்ப்பிக்கப்பட்ட 53 செயற்றிட்ட விண்ணப்பங்கள் 185 முதல் 882 நாட்கள் வரை எடுத்துக்கொண்டு இந்தக் கொள்கைக்கு முரணாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. | வரையிலான கோவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியில் கடுமையாக நீடிக்கப்பட்டது மற்றும் அந்த நேரத்தில் பொருளாதார நெருக்கடி நிலவியது. இதற்கு மேலதிகமாக சில செயற்திட்டங்களுக்குத் தேவைப்படும் லைன் ஏஜென்சி அனுமதிகளில் தாமதம், நிலப் பிரச்சனைகள் மற்றும் நிதி நெருக்கடிகள் காரணமாக முதலீட்டாளர்களின் முதலீடு பற்றாக்குறையினால் செயற்திட்ட அனுமதிகளில் காலதாமதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. | |
| (இ) | 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க BOI சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 45 முதலீட்டு திட்டங்கள் கணக்காய்வு திகதியில் உள்ளவாறு இன்னும் அவற்றின் ஒப்பந்தங்கள் நிலுவையில் இருப்பதை அவதானிக்க முடிந்தது. அதற்கு மேலதிகமாக, 34 முதலீட்டாளர்களுடன் ஒப்பந்தங்களை பூர்த்தி செய்ய சபை நடவடிக்கை எடுக்கவில்லை, அவர்களின் செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு வருடத்திற்கும் மேலாக அவர்கள் ஒப்பந்தங்களுக்காக காத்திருக்கிறார்கள்.மேலும், பியகம ஏற்றுமதி செயலாக்க வலயத்திலுள்ள குத்தகைதாரர்களுடன் கால நீடிப்புக்கான ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதில் கால தாமதங்கள் காணப்பட்டன. | 34 செயற்திட்டங்களில் 05 செயற்திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன, 06 செயற்திட்டங்களுக்கான அனுமதிகள் மீள வாபஸ் பெறப்பட்டுள்ளன, 02 செயற்திட்டங்கள் கிடப்பில் உள்ளன. ஒரு நிறுவனம் தற்போதுள்ள ஒப்பந்தத்தை நீடிக்க கோரும் போது, வலய முகாமைத்துவ திணைக்களானது பணிப்பாளரின் (BEPZ) கையொப்பத்துடன் கூடிய வழங்கும் கடிதத்தை வெளியிடுகின்றது. முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரை இந்தக் கடிதம் குத்தகைதாரருக்கும் சபைக்கும் இடையிலான தற்காலிக ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது. இருப்பினும், பல்வேறு காரணங்களால் குத்தகைதாரர்களுடன் சில ஒப்பந்தங்களை பூர்தி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. | - ஒப்பந்தங்கள் சரியான நேரத்தில் முடிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கணக்காய்வுக்கான சபையினால் வழங்கப்பட்ட செயற்றிட்ட நிலைமை அறிக்கையின் பிரகாரம், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க BOI சட்டத்தின் 17 ஆம் பிரிவின் படி 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவு செய்ய சமர்ப்பிக்கப்பட்ட 7 செயற்திட்ட விண்ணப்பங்கள் கணக்காய்வு திகதியான 2024 நொவம்பர் 30 வரையிலும் அங்கீகரிக்கப்படவில்லை. | 2023 ஆகஸ்ட் 31 இற்குப் பின்னர் நான்கு (04) செயற்திட்ட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன மற்றும் ஐந்து (05) செயற்திட்ட விண்ணப்பங்கள் இரத்து செய்யப்பட்டன மற்றும் நிலுவையில் உள்ள சுற்றுச்சூழல் அனுமதி, நிலுவையில் உள்ள UDA & CMC அனுமதி, காணி பிரச்சனை முதலிய பல்வேறு | சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஒருங்கிணைத்து விண்ணப்பத்தின் அங்கீகாரத்திற்கான செயல்முறையினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணங்களால் மீதமுள்ள விண்ணப்பங்கள் (07) அங்கீகாரத்திற்காக காத்திருக்கின்றன. | |
| (உ) | 2023 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட பெறுகை திட்டத்தின் செயல்முன்னேற்றத்தின் பிரகாரம், திட்டமிடப்பட்ட 129 மொத்த நடவடிக்கைகளில் 37 நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதன் விளைவாக, பெறுகை திட்டத்தின் செயல்பாட்டின் முன்னேற்றம் 29 சதவீதம் மட்டுமே ஆகும். | சபையானது 2023 மார்ச் 29 அன்று மூலதன பாதீட்டிற்கு அங்கீகாரம் வழங்கியது மற்றும் திறைசேரி 2023 மே 18 அன்று அதற்கான அங்கீகாரத்தினை வழங்கியது. பின்னர், திட்டமிடப்பட் 2023 இற்கான மூலதன பாதீட்டிற்கு அனுமதி வழங்குவதற்கான நேர இழப்பைக் கருத்தில் கொண்டு, திட்டமிடப்பட்ட பெறுகைகளின் எண்ணிக்கையைக் குறைத்து, ஆண்டின் இரண்டாம் பாதியில் மூலதன வரவு செலவுத் திட்டம் திருத்தப்பட்டது. பூர்த்தி செய்யப்பட்ட மதிப்பீடுகளைத் திருத்துதல், பெறுகை குழுக்களில் தாமதம், மீள் விலைமனு கோரல், வடிவமைப்பு மற்றும் விலைமனு ஆவணங்களை வெளி நிறுவனங்கள் தயாரிப்பதில் தாமதம், பணியாளர்கள் பற்றாக்குறை போன்றவை விநியோகத்தை பாதித்துள்ளன. | குறிப்பிட்ட காலக்கெடுவை பூர்த்தி செய்யும் வகையில் பெறுகை திட்டத்தை செயல்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 2023 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி பியகம ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் நடத்தப்பட்ட பௌதீக பரிசோதனையில், பொருள் மீட்பு மையம் குறிப்பிடத்தக்க அளவில் சீர்குலைந்த நிலையில் இருந்தது தெரியவந்தது. ஒதுக்கப்பட்ட அறைக்கு முன் மட்டுமின்றி, அப்பகுதி முழுவதும் உள்ள அணுகுவதற்கான சாலைகளிலும் கழிவுகள் குவிந்து கிடப்பது குறிப்பிடத்தக்கது. | கணக்காய்வு குழுவின் பௌதீக வருகையின் போது அவர்களால் அவதானிக்கப்பட்ட ஒழுங்கின்மை குறித்து எழுப்பிய வினவல்களை பொருள் பெறுகை மையத்தின் (MRC) முகாமையானது ஏற்றுக்கொள்கின்றது. | சுற்றுச்சூழலின் தூய்மையை உறுதி செய்யும் வகையில் கழிவு முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (எ) | பியகம ஏற்றுமதி பதப்படுத்தும் வலயத்தில் பிரத்தியேக எரிபொருள் நிலையத்தை அமைப்பதற்காக 40 பேர்ச்சஸ் பரப்பளவைக் கொண்ட 43 B இடமொன்றை ஒதுக்கீடு செய்வதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது மற்றும் 2022 மே 30 அன்று ஆறு மாத அவகாசம் வழங்கி அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தினை சபை வழங்கியது. மொத்த ஒப்பந்த பெறுமதி ஐ.அ.டொலர் 5,000,000 ஆவதுடன் | முதலீட்டாளர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக இந்தியன் ஆயில் கம்பனி அல்லது வேறு ஏதேனும் ஒரு தரப்பினரிடமிருந்து டீலர் ஷிப்பைப் பெற வேண்டும் மற்றும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சிடமிருந்து தேவையான அனுமதி இன்னும் பெறப்பட்டிருக்கவில்லை, இது | அனுமதிக் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் குறைந்தபட்ச முதலீடு ஐ.அ.டொலர் 250,000 தொகையானது 12 மாதங்களுக்குள் அனுப்பப்படல் வேண்டும். எவ்வாறாயினும், நிறுவனம் குறைந்தபட்ச முதலீட்டு தொகையான ஐ.அ.டொலர் 250,000 இனை செலுத்தவில்லை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உரிமத்துடன் தேவையான ஆவண சான்றுகளை ஒதுக்கப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கவில்லை. 2023 ஒக்தோபர் 30 அன்று காணியானது ஒதுக்கீடு செய்யப்பட்டு 17 மாதங்களுக்கு கடந்த போதிலும் கம்பனி செயற்திட்டத்தினை ஆரம்பிக்கவில்லை மற்றும் இந்த பிரச்சினைகள் தொடர்பாக சபையானது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. | சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். | |
| (ஏ) | கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் 16 ஏக்கரை குத்தகைக்கு எடுப்பதற்காக சுதந்திர வர்த்தக வலய விளையாட்டு சங்கத்துடன் (FTZSA) 1988 செப்டெம்பர் 27 அன்று சபையானது ஒப்பந்தம் செய்து கொண்டது. 2018 செப்தெம்பர் 26 வரை ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கான குத்தகை வாடகை ரூபா.200 ஆக இருந்தது. இயக்குநர்கள் சபையானது இந்தத் தொகையினை 2014 செப்தெம்பர் , 2017 யூன் மற்றும் 2018 ஏப்ரலில் மதிப்பாய்வு செய்து, சுயாதீன மதிப்பீட்டாளரின் அறிக்கையைப் பெறாமல் 30 ஆண்டுகளுக்கு ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூபா.1,000 ஆக நில வாடகையை உயர்த்துவதற்கு முன்மொழிந்தது. இருப்பினும் ரூபா. 200ல் இருந்து ரூபா.1000 ஆக அதிகரிப்பதற்கு சபை நான்கு வருடங்களை செலவிட்டுள்ளது. 1999 இல், 2001 இல் ரூபா.2 மில்லியனையும், 2005 இல் ரூபா.0.5 மில்லியனையும் FTZSA க்கு வழங்கியதன் மூலம், டவுன்ஷிப் டெவலப்மென்ட் திட்டத்தின் ஒரு பகுதியாக விளையாட்டு மைதானத்தை வாரியம் முழுமையாக மறுசீரமைத்தது. விளையாட்டு வளாகம் இப்போது கீழ் மைதானம் மற்றும் மேல் மைதானம் என இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. கீழ் மைதானம் ஒரு பெவிலியினை உள்ளடக்கியுள்ளது | குறிப்பாக கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் பல்வேறு விளையாட்டு மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதற்காக நிறுவன ஊழியர்களுக்கு வசதியளிப்பதற்காக CSR செயற்பாடாக சுதந்திர வர்த்தக வலய விளையாட்டு சங்கத்திற்கு (FTZSA) விளையாட்டு வளாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், FTZSA ஒரு இலாபம் ஈட்டும் அமைப்பு அல்ல, மேலும் வலயத்தின் ஊழியர்களின் நலனுக்காக மட்டுமே இந்த விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது மற்றும் வழக்கமான பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பிற சேவைகளின் ஏற்பாடுகளை பராமரிப்பதற்காக தற்போது அவர்கள் மைதான முற்பதிவுக்கான வாடகையை வசூலிக்கின்றனர். னவே, 2018 ஏப்ரல் 06 ஆம் திகதியடப்பட்ட சபையின் தீர்மானத்தின் பிரகாரம் ஒவ்வொரு 03 வருடங்களுக்கொருமுறை குறிப்பிட்ட தொகையில் 10 சதவீதத்திற்கு விஞ்சாத ஒரு தொகைக்கு திருத்தியமைக்கும் விதிகளுடன் ஒரு ஏக்கருக்கான வருட நில வாடகையை ரூபா.1,000 ஆக சபை | ஒரு தீர்மானத்தினை மேற்கொள்ளுவதற்கு முன்னர், அனைத்து தொடர்புடைய காரணிகளையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் நாளொன்றுக்கு உள்வாரியான தரப்பினர்களுக்கு ரூபா.25,000 மற்றும் வெளிவாரியான தரப்பினர்களுக்கு ரூபா.35,000 தொகைக்கு வாடகைக்கு விடப்படுகிறது, அதே நேரத்தில் மேல் மைதானத்தின் ஒரு பெவிலியனுக்கான நாளொன்றுக்கான வாடகை ரூபா.80,000 ஆகும். மைதானம் சபைக்கு சொந்தமானதாகவும் மற்றும் மைதானத்தின் மறுசீரமைப்புக்காக ரூபா.2.5 மில்லியன் செலவழித்திருந்த போதிலும் சபையினால் ஆண்டுக்கு ரூபா.16,000 தொகையினை மட்டுமே ஈட்ட முடிந்தது. | உயர்த்தியது. | |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 வலயங்களில் மொத்தாக 989 ஏக்கர்கள் வெற்றிடமாக உள்ளன, அவற்றில் நான்கு வலயங்களில் 40 சதவீதத்தை விஞ்சியதாக வெற்றிட விகிதங்கள் காணப்படுகின்றன. மேலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 வலயங்கள் அல்லாத தொடர்பான 785.1055 ஏக்கர் காணிகள் எந்த முதலீடும் இல்லாமல் வெற்றிடமாக உள்ளன. | முதலீட்டாளர்கள் மத்தியில் வெற்றிடமாக உள்ள காணிகளை ஊக்குவிப்பதற்கு சபை தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. | முதலீட்டாளர்கள் மத்தியில் வெற்றிடமாக உள்ள காணிகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பியகம வலயத்திலுள்ள பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் (CWWTP) ஆக்சிஜனேற்றப் பள்ளத்திற்கான இரும்பு அமைப்புடன் கூடிய இரண்டு ஏரேட்டர்களை வழங்குவதற்கும் நிறுவுவதற்குமான திணைக்கள மதிப்பீட்டிற்கு முதலீட்டுச் சபையானது ரூபா. 90,243,920 கிரயத்தில் அங்கிகாரம் வழங்கியுள்ளது. எனவே வழங்கப்பட்ட ஏல விலையானது ரூபா.126,639,127 ஆகும், இது அசல் மதிப்பீட்டின வரம்பனை ரூபா.36,395,207 தொகையால் மீறியுள்ளது. மேலும், துறை மதிப்பீட்டை விட 144 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ள (ஆ) தொகுதியின் நடைபாதை வடிகாண்களை மேம்படுத்துவது தொடர்பான பெறுகைக்கான திருத்தப்பட்ட மதிப்பீடானது விலை மனு மதிப்பீட்டு காலத்தில் தயாரிக்கப்பட்டது. அரச பெறுகை வழிகாட்டுதல்கள் 4.3 இன் பிரகாரம் மொத்த | மதிப்பீட்டின் திருத்தங்கள் விலை மனு மதிப்பீட்டு காலப்பகுதிக்குள்ளும் கணிசமான பதிலளிக்கக்கூடிய விலைமனுதாரரை தெரிவு செய்வதற்கு முன்னரும் மேற்கொள்ளப்பட்டன. | அரச பெறுகைக் வழிகாட்டுதல்களின் பிரகாரம் மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

செலவு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டுமென்ற போதிலும் சபையானது அதன் பிரகாரம் செயல்படவில்லை.

### 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாவத்தகம ஏற்றுமதி செயலாக்க வலயத்திலுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை (WWTP) மேம்படுத்துவதற்காக வடமேற்கு பிராந்திய அலுவலகத்தின் பணிப்பாளரால் 2019 நவம்பர் 26 அன்று கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், ஒப்பந்தமானது 20 மாதங்கள் கால தாமதத்துடன் 2021 ஒக்தோபர் 21 அன்று வழங்கப்பட்டது. இந்த கால தாமதம் காரணமாக விலையானது ரூபா.3,282.375 தொகையான 33 சதவீதத்ததால் அதிகரித்திருந்தது. 180 நாட்களுக்குள் அதாவது 2022 ஏப்ரல் 18 ஆம் திகதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இருப்பினும், நிர்மாணம் 8 மாதங்கள் கால தாமதத்தை சந்தித்தது, உண்மையான ஒப்படைப்பு திகதி 2022 திசெம்பர் 23 அன்று நிகழும். WWTP இயக்கியதைத் தொடர்ந்து நான்கு ஏரேட்டர்களிலும் உற்பத்தியாளர்களின் தவறுகளுக்குக் காரணமான குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டன இது ஒப்பந்தக்காரரின் செலவில் அவற்றை மாற்றம் செய்வதற்கு வழிவகுத்தது. எவ்வாறாயினும், 2024 மே 20 அன்றைய கணக்காய்வு திகதியின் பிரகாரம் இரண்டு ஏரேட்டர்கள் செயல்படாமல் உள்ளன, இது போன்ற குறைபாடுகளைத் தடுப்பதற்கு, மற்ற வலயங்களை போன்று நிர்மாணத்தினை சபையானது போதுமான அளவு திட்டமிட்டு கண்காணிக்கவில்லை என்பதைக் குறிக்கிறது. இது வலயத்தின் சுமூகமான செயல்பாட்டை பாதிக்கின்றது மற்றும் வலயத்தில் உள்ள முதலீட்டாளர்களுடன் நேர்மறையான உறவுகளைப் பேணுவதில் குறிப்பிடத்தக்க ஆபத்தை ஏற்படுத்துகிறது. | மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தை செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டமைக்கு கோவிட் - 19 பரவலின் பாதிப்புக்களும் காரணமாகும். சரியான காரணங்களைக் கருத்தில் கொண்டு ஒப்பந்ததாரர்களுக்கு கால நீடிப்பு வழங்கப்பட்டது. குறைபாடு பொறுப்பு காலத்தில், நான்கு இயந்திரங்களிலும் குறைபாடுகள்/சிக்கல்கள் தோன்றின. ஒப்பந்ததாரர் இந்த குறைபாடுகளை அவ்வப்போது சரிசெய்தாலும், தொடர்ந்து குறைபாடுகள் தோன்றியதால், ஆலோசகர் (NWS & DB) பழுதுபார்ப்பதை ஏற்கவில்லை. | அவசரத் தேவைகள் குறித்து வலயத்தின் முகாமைத்துவத்தின் கோரிக்கையின் பேரில், முன்னுரிமையாக விடயத்தை தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு முதல் பொல்கஹவெல ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் முதலீட்டாளர் ஒருவர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளார், இதனால் ரூபா.1,000,000,000 பெறுமதியான ஆதனங்கள் சேதமடைந்தன. பூர்வாங்க ஆய்வுக்காக ஆலோசகர் ஒருவரை சபை நியமித்தது மற்றும் வெள்ளப் பாதுகாப்புக்கான அணைக்கட்டு நிர்மாணிப்பதற்கான ஆலோசனைக் கட்டணம் ரூபா.60,000 ஆகும். எவ்வாறாயினும், அத்தகைய நபரை ஆலோசகராக தேர்ந்தெடுக்கும் செயல்முறை தொடர்பாக கணக்காய்வுக்கு எந்த சாண்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. கட்டப்பட்ட தடுப்பணை வெள்ளத்திற்கு தீர்வாகாது, எனவே காணியின் நிலப்பரப்பை கணக்கில் கொள்ளாமல் அணை கட்டப்படுகிறது. முதலீட்டாளர்களுக்கு அவர்களின் ஆதனங்களை பாதுகாத்து அவர்களுக்கு உகந்த சேவைகளை வழங்குவதற்கும் வலயத்தினை திறம்பட நிர்வகிப்பதற்கும் மற்றும் நிலைமையை போதுமான அளவில் பகுப்பாய்வு செய்வதற்கும் முதலீட்டு சபை தவறியுள்ளது எனவே முதலீட்டாளர் இன்னும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். | குடா ஓயாவிற்கு அருகில் உள்ள காணியின் மிகக் குறைந்தப் பகுதியில் இருந்து 1.5 மீற்றர் உயரத்தில் அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. நிலத்தின் தற்போதைய நிலைகளுக்கு ஏற்ப கட்டு உயரம் மாறுபடும். எவ்வாறாயினும், இப்பகுதியின் சாதாரண வெள்ளப்பெருக்கிற்காக இந்த அணை முதற்கட்டமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது மேலும் இந்த வருடத்தில் கொங்கிறீட் சுவரால் கட்டை உயர்த்துவதற்கு மற்றொரு கட்டுமானம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆலோசகரின் கூற்றின் பிரகாரம், முதலீட்டாளரின் கட்டிடத்திற்கும் ஆற்றுக்கும் இடையே உள்ள இடைவெளி 1.5 மீட்டருக்கும் அதிகமான உயரத்துடன் ஒரு மண் கட்டை வடிவமைக்க போதுமானதாக இல்லை. | ஒரு வலயத்தின் தளவமைப்பை திட்டமிடும் போது இது போன்ற சிக்கல்களை முன்கூட்டியே தீர்த்தல் வேண்டும், மேலும் எதிர்காலத்தில் வலயத்தல் உள்ள வெள்ளத்தைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை 1,299 ஆகவும், உண்மையான பணியாளர் எண்ணிக்கை 1,111 ஆகவும் இருந்தது. அதன் பிரகாரம் 242 வெற்றிடங்கள் காணப்பட்டன.மேலும், முதன்மை மட்டத்தில் 54 திறமையற்ற (unskilled ) ஊழியர்கள் மேலதிகமாக இருந்தனர். | முதன்மை மட்டத்தில் உள்ள அனைத்து மிகையான பணியாளர்களும் தற்காலிக / ஒப்பந்தப் பாதுகாப்புப் பணியாளர்கள் ஆவர். அவர்கள் 2019 செப்தெம்பர் 18 ஆம் திகதிய 29/2019 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 01 அன்று நிரந்தரப் பணியாளர்களாக உள்வாங்கப்பட்டனர். மேலும், மேலதிகமாகவுள்ள முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்ப வகை) , பிங்கிரிய, ஏறாவூர் மற்றும் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கிகாரத்துடன் சபையின் பதவியணியினர்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஹம்பாந்தோட்டையில் மூன்று புதிய வலயங்களை அமைப்பதற்கு வசதியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்களாவர். இது தொடர்பில் புதிய பதவிகளை உருவாக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டது. | |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பியகம ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் கைவிடப்பட்ட கல்குவாரி, சுமார் 30-40 அடி ஆழம் மற்றும் சுமார் 5 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதுடன் தேங்கிய மழைநீர் காரணமாக நீர்த்தேக்கமாக மாறியுள்ளது. குவாரியானது 1997 ஆம் ஆண்டு வரை ஒரு வெளிப்புற அமைப்பால் இயக்கப்பட்டது, மேலும் தோண்டப்பட்ட பொருட்கள் வலயத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டன. மழைக் காலங்களில், மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதால், சுற்றுவட்டார கிராமங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், அப்பகுதி மக்கள், சபையிடம் பலமுறை முறைப்பாடுகளை தெரிவிக்கின்றனர். 2023 நவம்பர் 30 இல் உள்ளவாறு, இந்தச் சிக்கல் தீர்க்கப்படாமல் உள்ளன. | வெள்ள நிலைமையை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் சபை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. கம்பஹா ஒருங்கிணைப்புக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அது ஏற்றுக்கொண்டுள்ளதுடன், வெள்ளப் பிரச்சினையைத் தணிக்கும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து நிதியை விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும். | வெள்ள இடரை தணிப்பதற்கு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படல் வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பியகம வலயத்தின் நாளாந்த சராசரி நீர் நுகர்வு 21,000m$^3$ ஆகும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுகள் தற்போது அம்பத்தலே நீர் தேக்கத்திற்கு மேல் அமைந்துள்ள நாட்டிற்கான முதன்மை நீர் விநியோகமான களனி ஆற்றுடன் இணைக்கும் இயற்கை நீரோடையில் வெளியேற்றப்படுகிறது. சுத்திகரிக்கப்படாத வெளியேற்றங்கள் மற்றும் அபாயகரமான பொருட்களின் திரட்சியுடன் தொடர்புடைய கடுமையான உடல்நல அபாயங்களைத் தணிப்பதற்கு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பா் சபையானது (NWS&DB) Agricole Corporate & | ஒப்பந்தம் 2024 ஏப்ரல் 15 அன்று வழங்கப்பட்டது. | செயற்திட்டங்கள் நிறுவப்பட்ட காலக்கெடுவுடன் சீரமைக்கப்படல் வேண்டும், மேலும் வெளிநாட்டு நிதிகளின் பயன்பாட்டை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

Investment Bank, France கடன் திட்டத்தின் கீழ் ரூபா.32,000 மில்லியன் செலவில் ஆற்றின் கீழ்நோக்கி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வெளியேற்றும் செயற்திட்டத்தைத் ஆரம்பித்ததுடன் மற்றும் 2017 ஜனவரி 23 முதல் 3 ஆண்டுகளுக்குள் நிறைவ செய்யப்பட்டது. எவ்வாறாயினும், குழாய் பதிக்கும் பணி முடிவடையாததுடன் பொதுமக்களின் எதிர்ப்பின் விளைவாக 2019 திசெம்பரில் இருந்து இறுதியான 160 மீட்டர் குழாய் பதிக்கும் பணியானது இடை நிறுத்தப்பட்டது. தீர்வு இல்லாமல் விரிவான தாமதங்கள் ஏற்பட்டதால், செயற்திட்டம் இறுதியில் திரும்பப் பெறப்பட்டது, மேலும் நிதியானது நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, 2023 மூலதன பாதீட்டில் இருந்து ரூபா.95 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் மீதமுள்ள பணிகளைத் தொடர்வதற்கு சபை அங்கிகாரம் வழங்கியது. இந்த செயற்திட்டம் 2024 சனவரி 05 இல் விலை மனுக்கான கட்டத்தில் உள்ளது. இத்திட்டத்தில் காலதாமதம் ஏற்படுவதனாலும் பொதுச் சுகாதாரம் பாதிக்கப்படுவதனாலும் செயற் திட்டத்திற்கான நிதியை சபையானத ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது.